**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி.**

**முன்னிலை – திரு.பி.எஸ். ரஸ்கின்ராஜ், பி.ஏ.,எல்.எல்.பி.,**

**சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.**

**2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 09ம் நாள் வியாழக்கிழமை**

**I.A.No.2 /2025 in O.S.314/ 2019**

பாண்டி – மனுதாரர்/ 2ம் பிரதிவாதி

/ எதிர் /

சத்யா – எதிர்மனுதாரர் / வாதி

இவ்வுத்தரவு என் முன்பு 22.09.2025–ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்து மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.தங்கப்பாண்டியன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.சரவணன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு ஆவணங்கள் மற்றும் வாதங்கள் பரிசீலிக்கப்பட்டு இதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்………

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரர் தரப்பில் Order 26, Rule 10(A) மற்றும் 151-ன் கீழ் தாக்கல் செய்யயப்பட்ட மனுவாகும்.

**1. மனுவின் சுருக்கம்:-**

1ம் பிரதிவாதியின் தாயார் பேச்சி என்ற பேச்சியம்மாள் அவர்கள் கடந்த 20.10.2017 அன்று கடனுக்காக எதிர்மனுதாரர் / வாதிக்கு ஓர் புரோநோட் எழுதிக் கொடுத்தாகவும், அதன் பேரில் எதிர்மனுதாரர் / வாதிக்கு கடன் தொகை மற்றும் வட்டி செலுத்தக் கோரி தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் வாதிக்கு 2ம் பிரதிவாதி எந்த சூழ்நிலையிலும் புரோநோட் எழுதிக் கொடுக்கவில்லை என மறுத்துள்ளார். வாதி குறிப்பிட்டுள்ள புரோநோட்டில் மனுதாரரின் குடும்பத்தினர் யாரும் கையெப்பம் செய்யப்படவில்லை. மனுதாரரின் தாயார் பேச்சி என்ற பேச்சியம்மாள் கடந்த 23.01.2017-ம் பதிவு ஆவண எண். 204 / 2017 ன் மூலம் மகேந்திரா ரூரல் பைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு தாவா வழக்கில் அட்டாக்

செய்யப்பட்டுள்ள சொத்தினைப் பொறுத்து Memorandum of Deposit of Title Deeds எழுதிக் கொடுத்த ஆவணத்தில் கைரேகை செய்துள்ளார். மேற்படி ஆவணத்தில் மனுதாரர் 1 வது சாட்சியாக கையெப்பம் செய்துள்ளார். மேற்படி ஆவணங்களின் கைரோகை மற்றும் கையெழுத்துக்களை வாதி தாக்கல் செய்துள்ள புரோநோட் ஆவணத்தில் உள்ள கைரோகை மற்றும் கையொப்பம் ஆகியவற்றை நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்து அரசு கைரேகை பிரிவுக்கு அனுப்பி கைரேகையை சோதனை செய்து அறிக்கை தாக்கல் செய்யும் பட்சத்தில் உண்மை வெளிவரும். எனவே, மேற்படி கடந்த 23.01.2017–ம் தேதியிட்ட கைரேகை, மனுதாரர் 1வது சாட்சியாக கையெப்பம் செய்தது, வக்காலாத்து நாமா மற்றும் புரோநோட்டில் உள்ள கைரேகை ஆகியவற்றை ஒப்பீடு செய்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. எதிருரையின் சுருக்கம்:–</u>**

வாதி தரப்பில் கடந்த 23.06.2025 அன்று நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து 1 முதல் 3 வரை ஆவணங்கள்

தாக்கல் செய்து அதில் வாதி தரப்பு ஆவணங்களில் புரோநோட் ஒன்றாகும். மேற்படி மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வாதியை கடந்த 01.07.2025 அன்று குறுக்கு விசாரணை செய்தார்கள். அதில் 1ம் பிரதிவாதியின் கையெப்பத்தையோ, கைரேகையையோ குறித்து எவ்வித எவ்வித கேள்வியும் கேட்கவில்லை. குறுக்கு விசாரணையில் மனுதாரர் தரப்பில் புரோநோட்டை எதிர்மனுதாரர் வாதியிடம் கொடுக்கவில்லை என்றும், அதை குறித்து மறுத்தும் எந்தவித குறுக்கு விசாரணையும் செய்யவில்லை.

அடுத்ததாக, எதிர்மனுதாரர் இரண்டாவது சாட்சி லதா பாண்டியம்மாள் கடந்த 04.07.2025 அன்று முதல் விசாரணை மற்றும் கடந்த 02.08.2025 அன்று குறுக்கு விசாரணையிலும் மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் போது கைரேகை மற்றும் கையெப்பம் குறித்து எவ்வித குறுக்கு விசாரணையும் செய்யவில்லை. மேற்படி வழக்கானது தற்போது மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் விசாரணைக்காக நிலுவையில் உள்ளது. கடந்த 13.09.2022–ம் தேதி 1ம் பிரதிவாதி இறந்துவிட்டார். 1ம் பிரதிவாதி உயிருடன் இருக்கும் போது மேற்படி மனுவை

மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்திருந்தால் புரோநோட்டில் உள்ள கைரேகையை நிரூபிக்க சுலபமாக இருந்திருக்கும். ஆனால், மேற்படி புரோநோட்டானது உண்மை தன்மை இல்லை என்று தெரிந்தே மனுதாரர் இடைக்கால மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே மனுவை தள்ளுபடி செய்யக் கோரி எதிர்மனுதாரரால் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

***3.1.*** மனுதாரர் அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி ஆவார். தாவா வழக்கானது, மனுதாரர் / பிரதிவாதிகளுக்கு எதிராக புரோநோட் எழுதிக் கொடுத்துள்ளதாக எதிர்மனுதாரர் / வாதியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். மேற்படி புரோநோட்டில் பிரதிவாதியும், பிரதிவாதியின் தாயாரும் எந்த கையெழுத்தும் செய்யவில்லை. பிரதிவாதியின் தாயார் பேச்சி என்ற பேச்சியம்மாள் கடந்த 23.01.2017–ம் பதிவு ஆவண எண். 204 / 2017 ன் மூலம் மகேந்திரா ரூரல் பைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் அவருக்கு பாத்தியப்பட்ட

சொத்துக்களை அடமானம் வைத்து கடன் பெற்றிருக்கிறார். மேற்படி ஆவணத்தில் பிரதிவாதியின் தாயார் கையெழுத்து செய்துள்ளார். மனுதாரர் / 2ம் பிரதிவாதி 2வது சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார். மேற்படி ஆவணத்தையும், தாவா புரோநோட்டையும் பிரதிவாதிகள் கையெழுத்து அடங்கிய வக்காலத்து ஆகியவற்றை தடவியல் பரிசோதனைக்கு அனுப்ப வேண்டும். அதற்கு ஒரு வழக்கறிஞரை நியமனம் செய்ய வேண்டும் என்பதாகும்.

அடுத்ததாக, தாவா வழக்கில் மனுதாரர் / 2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் வழக்குரையை பரிசீலனை செய்யும் போது, ரூ.3,60,000/– பெற்றுக் கொண்டு 1, 2 பிரதிவாதிகள் புரோநோட்டில் கையெழுத்து செய்ததாக கூறுவது முற்றிலும் தவறானது ஆகும். புரோநோட் எழுதிக் கொடுக்கவில்லை என மறுத்திருக்கிறார். தற்போது சர்ச்சைக்குரிய கடனுறுதி சீட்டு கடந்த 20.10.2017 தேதியிட்டதாகும். மேற்படி கடனுறுதி சீட்டில் 1, 2 பிரதிவாதிகள் கையெழுத்து மற்றும் கைரேகை செய்தார்களா? என்பதை தடவியல் பரிசோதனை செய்வதற்கு கடந்த 27.03.2017 தேதியிட்ட மேற்படி சர்ச்சைக்குரிய புரோநோட்

கடந்த 27.03.2017 தேதிக்கு முன்பாக பதிவு செய்யப்பட்ட ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தற்போது எதிர்மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ள எதிருரையில் பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் அவரது கையெழுத்தை மறுக்கவில்லை என்றும், கடந்த 01.07.2025 அன்று வாதியை குறுக்கு விசாரணை செய்யும் போது, 1ம் பிரதிவாதியின் கைரேகையை மறுக்கவில்லை என்றும் தான் எதிருரையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆக, 1, 2 பிரதிவாதிகள் எதிர் வழக்குரையில் வா.சா.ஆ.1 புரோநோட் அடங்கிய கையெழுத்து எதுவும் இல்லை என மறுத்துள்ள நிலையில் மேற்படி புரோநோட்டில் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகை 1, 2 பிரதிவாதிகளுடையது தானா? இல்லையா? என நிருபிக்க வேண்டிய சுமை பிரதிவாதியை சேர்ந்தது ஆகும். வழக்கு விசாரணை ஆரம்பம் ஆகிவிட்டது. வாதியை குறுக்கு விசாரணை செய்தாகிவிட்டது என்ற ஒரே காரணத்திற்காக இந்த மனுவை நிராகரிக்க முடியாது. இந்திய சாட்சிய சட்டப்படி புரோநோட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதியுடையது அல்ல என்பதை நிருபிக்கும் சுமை பிரதிவாதியை சார்ந்தது

என்பதால் தற்போது பிரதிவாதி மேற்படி புரோநோட்டுக்கு முந்தைய பதிவு செய்யப்பட்ட பிரதிவாதியின் கையெழுத்து அடங்கிய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதால் மேற்படி சர்ச்சைக்குரிய 23.01.2017 தேதியிட்ட புரோநோட்டை தடவியல் பரிசோதனைக்கு அனுப்புவது நீதியின் பால் உகந்ததாக இருக்கும் என கருதி நீதிமன்ற வழக்கறிஞர் P.சிவக்குமார் அவர்களை நியமனம் செய்து அவருக்கான கட்டணம் ரூ.10,000/– என நிர்ணயம் செய்தும், தடவியல் பரிசோதனைக்கான கட்டணம் ரூ.15,000/– என நிர்ணம் செய்து ஆக, மொத்தம் ரூ.25,000/–யை மனுதாரர் / 2ம் பிரதிவாதி உத்தரவு பிறப்பித்த 7 நாட்களுக்குள் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் மனு தானகவே தள்ளுபடி செய்யப்படும் என நிபந்தனையுடன் மனு அனுமதிக்கத்தக்கது என தீர்மானிக்கப்படுகிறது.

இறுதியாக, கடந்த 23.01.2017ம் தேதியிட்ட புரோநோட்டை தடவியல் பரிசோதனைக்கு அனுப்ப நீதிமன்ற வழக்கறிஞர் P.சிவக்குமார் அவர்களை நியமனம் செய்து அவருக்கான கட்டணம் ரூ.10,000/– என நிர்ணயம் செய்தும், தடவியல்

பரிசோதனைக்கான கட்டணம் ரூ.15,000/- என நிர்ணம் செய்து ஆக, மொத்தம் ரூ.25,000/-யை மனுதாரர் / 2ம் பிரதிவாதி உத்தரவு பிறப்பித்த 7 நாட்களுக்குள் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் மனு தானகவே தள்ளுபடி செய்யப்படும் என நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 09-ஆம் நாள் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.10.09 17:30:41 +0530

சார்பு நீதிபதி,

உசிலம்பட்டி.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:-</u>**

--- இல்லை ---

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :—</u>**

**--- இல்லை ---**

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.10.09 17:30:47 +0530

**சார்பு நீதிபதி,**

**உசிலம்பட்டி.**

**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி.**

**I.A.No. 2/ 2025 in**

**O.S. 314/ 2019**

**நேரிய / வரைவு / உத்தரவு**

**09.10.2025**